திரு. கொளத்தூர் கோதண்டம்: செங்கல்பட்டிலே மட்டும் தீ அணைப்பு நிலையம் இருக்கிறது. செங்கல்பட்டிலிருந்து 60, 70 மைல் தூரத்திலிருக்கும் கிழக்கடற்கரை ஓரங்களிலே தீ அணைப்பு நிலையங்கள் இல்லாததினாலும், வைக்கோல் போர்கள் இருப்பதாலும், தீ விபத்துக்கள் ஏற்படுகிற காரணத்தினால் இனிமேலாவது தீ அணைக்கும் நிலையங்கள் அங்கே வைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் முதலிலே கேள்விக்குப் பதில் சொல்லும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கையிலே இல்லை. தீ அணைப்புக்காக வருகிற அழைப்புகளின் எண்ணிக்கையைப் பொறுத்துத் தான் தீ அணைப்பு நிலையங்கள் வைக்கவேண்டிய நிலை இருக்கிறது என்று சொன்னேன். மதுராந்தகத்திலே ஒரு ஆண்டு அழைப்பே இல்லாமலும், சில ஆண்டுகளில் இரண்டு மூன்று அளவில்தான் அழைப்புகள் இருந்தன. ஆகவே அந்த இடம் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 28 இடங்களில் தீ அணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப் படும் என்று சொன்னார்கள். இதிலே கோவில்பட்டியும் சேர்க்கப்பட்டிருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அந்த இடமும் சேர்க்கப்பட்டிருக் கிறது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. நி. பொன்னுமலை: பெரும்பாலும் தீ அணைப்புப் படைகள் நகரப் பகுதிகளிலேதான் இருக்கின்றன. ஆனால் கிராமப் பகுதிகளிலேதான் குடிசைகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, கிராமப் பகுதிகளிலே தீ அணைப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எல்லா இடங்களிலும் தீ அணைப்பு நிலையங்கள் வைப்பது என்பது முடியாத காரியம். மதுராந்தகம் போன்ற தாலுக்கா' தலைநகரிலே இது முடியாதது, தேவையில்லாதது என்று இருக்கிற நேரத்திலே ஒவ்வொரு கிராமத்திலே வைப்பது என்பது முடியாத ஒன்றாகும்.

Officer oriented Scheme

* 284 Q.—THIRU A. M. RAJA and THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government have introduced the **Officer-oriented** Scheme in any of the departments of the **Secretariat** ;

(*b*) if so, the names of such departments ; and

(c) the saving effected thereby, year-war ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) நிதித் துறையில்.

(உ) ஒரு ஆண்டிற்கு ரூ. 1·10 இலட்சம்.

திரு ஏ.எம். இராஜா: தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்திலுள்ள அரசு பதிவுபெறாத அலுவலர்களிடமிருந்து இந்தத் திட்டத்தைப்பற்றி ஏதேனும் கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படியென்றால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி எந்தக் கோரிக்கையும் வர வில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்திலே நிதித் துறையிலே மட்டும்தான் இந்த முறை அமல்படுத்தப்படுகிறது, அதன்மூலம் ஒரு ஆண்டுக்கு ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் மிச்சப்படுகிறது என்று சொன்னார்கள். மற்றத் துறைகளிலும் எப்போது அமல்படுத்தப்படும்? தலைமைச்செயலகத்தைத் தவிர வேறு துறைகளிலும் எப்போது அமல் படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நிதித் துறையைப் பொறுத்தவரை இந்தச் சீரமைப்பு வசதியாக இருக்கிறது. நிதித் துறையில் கோப்புகளில் கருத்து அறிவிப்பு செய்வது மாத்திரம்தான் அவர்கள் வேலையாக இருக்கிறது. ஆனால் வேறு பல துறைகளில் பல பேர்கள் கைக்குப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. மற்றத் துறைகளில் அந்தச் சங்கடம் இருக்கிற காரணத்தால் எல்லாத் துறைகளுக்கும் அதை விரிவுபடுத்த இயலாது.

Minister's visit to Mauritius Island.

* 285 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether the Hon. the Minister for Health and Harijan Welfare paid a visit to Mauritius Island; and

(*b*) if so, when and for what purpose?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) மோரிஷஸ் தீவின் மக்களின் அழைப்பிற்கிணங்க மாண்புமிகு ஹரிஜனநல செய்தித்துறை அமைச்சர் 1968 ஜூனில் அத்தீவிற்கு கலாச்சார முறையில் சென்றுவந்தார்.

திரு. கே. விநாயகம்: அப்படி அழைப்பின்பேரிலே போன அமைச்சர் அவர்கள் அங்கிருந்து எதைக் கற்றுக்கொண்டு வந்தார்கள்? எந்த அனுபவத்தை இங்கே கொண்டு வந்தார்கள்? அந்த முறைகளை எல்லாம் செயல்படுத்துவதற்கு, அவைகள் நல்லவைகளாக இருந்தால், முதல் அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எதையும் கற்றுக்கொண்டு வரவில்லை. ஆனால் அவர்கள்தான் தமிழ் கற்றுக்கொள்ளவேண்டும், அதற்காக இங்கிருந்து ஆள் வேண்டுமென்று சொன்னதாகக் கேள்வி.

Students Anti-Hindi Agitation Council.

* 286 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the Students Anti-Hindi Agitation Council of Madurai had decided to disregard the National Anthem and National Solidarity Pledge?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, அதன் மீது அரசாங்கம் எடுத்துக்கொண்ட முடிவு என்ன? தேசீய கீதத்தை அவமதிப்பவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தேசீய கீதம் பாட மறுத்தவர்களுக்கும் அதைத் தடுப்பவர்களுக்கும், உறுதிமொழி எடுக்காதவர்களுக்கும், தண்டனைக் கொடுப்பதற்குச் மத்திய சட்டத்திலோ, மாநில சட்டத்